இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 53 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 15 – வெள்ளிக்கிழமை 02 அக்டோபர் 2026 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 53 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 15 - Friday 02 October 2026 - Chennai 12 Pages ₹ 5.00

தாராபுரம் இடைத்தேர்தல் – இன்று பிரச்சாரம்: கோவை வருகை தந்த

தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு மாபெரும் வரவேற்பு!

வழிநெடுகிலும் ஆண்களும் – பெண்களும் திரண்டு உற்சாக முழக்கம்!



கோவை, அக்.2-

தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற் கொள்வதற்காக நேற்று இரவு கோவை வருகை தந்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கோவை விமான நிலையத்திலிருந்து உற்சாக வர வேற்பு அளிக்கப்பட்டது. வழி நெடுகிலும் சாலையின் இருபுறமும் மக்கள் திரளாக திரண்டு எழுச்சிமிகு வரவேற்றனர்.

மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்றத் தொகுதிகளில் அ.தி.மு.க. சார்பில் போட்டி யிட்டு வெற்றி பெற்ற மரகதம் குமரவேல், சத்யபாமா ஆகியோர் வெற்றி பெற்று கைவி ரல் மை காய்வதற்குள் தங்கள் பதவியை ராஜினாமா செய்து த.வெ.க.வில் இணைந் தனர். இவர்கள் த.வெ.க.வில் இணைந்தது குதிரை பேரம் என்று பரவலாக பேசப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து அக்டோபர் 6-ஆம் தேதி இந்த இரண்டு தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் கமிஷன் அறிவித்ததைத் தொடர்ந்து தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தி.மு.க. சார்பில் மதுராந்த கம் தொகுதியில் இ.பரந்தாமன் அவர்களும், தாராபுரத்தில் திருமதி சுகன்யா அவர்களும் போட்டியிடுவார்கள் என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

அதனைத் தொடர்ந்து கழகம் சார்பில் போட்டியிடும் மதுராந்தகம் – இ.பரந்தாமன், தாராபுரம் – சுகன்யா ஆகியோரை ஆதரித்து முன்னாள் அமைச்சர்கள், கழக முன்னணி யினர் மற்றும் கட்சித் தலைவர்கள் தீவிரப் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்!

கழக இளைஞர் அணிச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உத யநிதி ஸ்டாலின் அவர்கள் ஏற்கனவே கழக வேட்பாளர்கள் இ.பரந்தாமன், திருமதி சுகன்யா ஆகியோரை ஆதரித்து சூறாவளி பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார்.

கனிமொழி இராஜாத்தி கருணாநிதி பிரச்சாரம்!

மேலும் கழக துணைப் பொதுச் செயலா ளர் கனிமொழி இராஜாத்தி கருணாநிதி எம்.பி.யும் இரு தொகுதிகளிலும் பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இன்று பிரச்சாரம் தொடங்குகிறார்!

இந்நிலையில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று தாராபுரத் தில் போட்டியிடும் கழக வேட்பாளர் சுகன் யாவை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொள்கி றார். தேர்தல் பிரச்சாரத்திற்காக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.10.2026) இரவு சென்னை விமான நிலை யத்திலிருந்து கோவை விமான நிலையத்திற்கு வருகை தந்தார். கோவை விமான நிலையத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை ஆயிரக்கணக் கான கழகத்தினர் திரண்டிருந்து வரவேற்ற னர். விமான நிலையத்திலிருந்து வெளியே வந்ததும் அங்கே குழுமி இருந்த கழகத்தினர் ஆண்களும், பெண்களும் கழகத் தலைவர் வாழ்க என்று வாழ்த்தொலி எழுப்பி வரவேற் றனர்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர் கள் அங்கிருந்து தங்கும் இடத்திற்கு செல்லும் வழிநெடுகிலும் கழகத்தினர் சாலையின் இரு புறமும் திரண்டு நின்று வாழ்த்தொலி எழுப்பி வரவேற்றனர்.

மேலும் வழிநெடுகிலும் பூக்களை தூவி யும் உற்சாக வரவேற்பு அளித்தனர். கழகத் தலைவருக்கு அளிக்கப்பட்டு எழுச்சிமிகு வர வேற்பை காணும் போது மதுராந்தகம், தாரா புரம் இடைத் தேர்தலில் தி.மு.க.வின் வெற்றி உறுதி செய்யப்பட்ட வெற்றி ஆகும்.

கோவை விமான நிலையத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை முன் னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், முன் னாள் அமைச்சர் கே.என்.நேரு, கழக துணைப்பொதுச் செயலாளர் ஆ.ராசா, முன் னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் துரை செந் தமிழ்செல்வன், தொண்டாமுத்தூர் ரவி, தள பதி முருகேசன், முன்னாள் அமைச்சர்கள் பொங்கலூர் பழனிச்சாமி, வெள்ளக்கோ வில். சாமிநாதன், மேயர் ரங்கநாயகி, நாடா ளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார், கழக தீர்மானக்குழு செயலாளர் நா.கார்த்திக், துணைமேயர் வெற்றிச்செல்வன், கழக சட்டத்துறை இணைச்செயலாளர் வழக்கறி ஞர் அருள்மொழி உள்ளிட்ட ஆயிரக்கணக் கானோர் திரண்டு வரவேற்றனர்.

இதனைத் தொடர்ந்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (அக்.2) தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலில் போட் டியிடும் தி.மு.க. வேட்பாளர் சுகன்யாவை ஆதரித்து பிரசாரம் மேற்கொள்கிறார்.

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், அமரா வதி சிலையில் இருந்து பொள்ளாச்சி சாலை பெரிய கடை வீதி வழியாக சாலை வலம் சென்று வாக்கு சேகரிக்கிறார்.

இதனைத் தொடர்ந்து, மல்லி ரிசார்ட் அருகே நடைபெறும் பொதுக் கூட்டத்தில் பங் கேற்று வேட்பாளர் சுகன்யாவை ஆதரித்து பிரசாரம் மேற்கொள்ள உள்ளார்.

நாளை (அக்.3) மதுராந்தகம் தொகுதியில் கழகம் சார்பில் போட்டியிடும் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரச்சாரம் மேற் கொள்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிம்மக் குரலால் - செழுந்தமிழ் உச்சரிப்பால் - கம்பீர நடையால்

திரையுலகை ஆண்டவர் - நடிகர் திலகம் சிவாஜி கணேசன்!

பிறந்தநாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!



சென்னை, அக்.2-

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு நேற்று பிறந்தநாளாகும்.

இந்நாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப் பதிவில், "திரையுல கையே ஆண்டவர் நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசன் அவர்கள்!" என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

"சிம்மக் குரலாலும் செழுந்தமிழ் உச்சரிப்பாலும் கம்பீர நடையாலும் திரையுலகை ஆண்ட நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசன் அவர்களது பிறந்தநாள்!

இந்நாளில், நடிகர் திலகத்துடன் பழகிய அழகிய தருணங்களையும், ஈடு இணையற்ற அவரது நடிப்பாற்றலையும் நினைவுகூர்ந்து போற்றுகிறேன்"!

இவ்வாறு அப்பதிவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஆஸ்கார் விருதுக்கு,உலகமகா நடிப்புடா சாமி!...

